நெடுந்தீவு பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நெடுந்தீவு பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி நெடுந்தீவு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 2,880 | | |
| விடுபட்ட தவறு | | | 01 | 691,225 |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6இ243இ928 பெறுமதியுடைய 09 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 1,324,059 விளைந்திருப்பதுடன் நேரொப்பான

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 4இ739இ057 விளைந்திருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 2இ951இ741 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 3இ556இ685 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 230 | 143 | 22 |
| குத்தகை வாடகைகள் | 208 | 284 | 139 |

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 10 | 34 | - |
| வேறு வருமானங்கள் | 2,846 | 5784 | 253 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

-----------------------------

ரூபா 414,308 பெறுமதியான வரி மற்றும் சந்தை கடை அரசிறை மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடுவதற்கு சபையினால் எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

------------------------------------------

நீதவான் நீதிமன்றங்களிலிருந்து நடைமுறையாண்டுக்கு பெறப்பட வேண்டிய நீதமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களுக்குமான பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

-----------------------------------------------------

நடைமுறையாண்டுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களுக்கான பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.4.1 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 16,140,600 ஆகக் காணப்படுகின்றது.

விபரம் வருமாறு :

| விபரம் | தொகை<br>ரூபா |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 13,211,265 |
| களஞ்சியப் பொருட்கள் | 2,929,335 |
| | 16,140,600 |

### 2.4.2 முற்பணக் கணக்குகள்

i குறித்த நிதி வருடத்தில் வழங்கப்பட்ட முற்பணங்கள் அவ்வருடத்திலயே தீர்வு செய்யப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட போதும் நடைமுறையாண்டு இறுதி வரை ரூபா 310,819 பெறுமதியான முற்பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

ii பத்து வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 156,715 பெறுமதியான தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| முற்பணம் வழங்கிய ஆண்டு | முற்பணம் வழங்கிய நோக்கம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1999 | நீர் விநியோக விஸ்தரிப்பு | 100இ000 |
| 2000 | பொருள் கொள்வனவு | 56இ215 |
| 2004 | உறுப்பினர் முற்பணம் | 500 |
| | | 156,715 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஜஜ பிரிவு 5(ஒஜை) | காசு, களஞ்சியத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. |

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் முத்திரைத் தீர்வை, தண்டப்பணங்களின் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 310,819 முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை |
| (ஆ) <u>இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 42,396 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| <u>(இ) வட மாகாண சபை நிதி ஒழுங்கு விதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 101 மற்றும் 102 | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | ரூபா 125,006 பெறுமதியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |

2.6 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளில சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 21,260,557 பெறுமதியான 10 வேலைத்திட்டங்கள் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிக்கப்பட்ட ரூபா 86இ150இ000 பெறுமதியான 06 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.7 செயற்பாடுகளில் செயற்திறனின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

i 2007 இல் அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 40,896 பெறுமதியான பிடிபணம் அறிக்கையிடும் திகதி வரை குறித்த ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ii ஊழியரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3,150 குறித்த ஊழியருக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.8 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் முறைகைள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

1. வருமான சேகரிப்பு
2. நிலையான சொத்துக்கள்
3. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு
4. நானாவித வைப்புக்கள